E.P.No.13/2021 in O.S.No.63/2016 நாள்: 26.08.2025

ம.சா.1 திருமதி. பத்மாவதி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தானது கிரையமாக வாங்கவில்லை புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். எனது சொத்துக்கும் மேற்கில் எதிர்மனுதாரர்கள் சென்று வருவதற்கு 3 அடி அகலப்பாதை உள்ளது என்றால் சரிதான். நான் இருக்கும் இடம் புறம்போக்கு என்பதால் பாதையில் எனக்கு பாத்தியம் இருக்கிறது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான்தான் மேற்படி பாதையில் மரங்களை நட்டு ஆக்கிரமிப்பு செய்து பாதையை சுருக்கிவிட்டேன் என்றால் சரியல்ல. இடத்தை அளவீடு செய்ய வட்டாட்சியர் வந்தார் என்றால் சரிதான்.

2) எதிர்மனுதாரர்கள் மீது சந்தேகப்பட்டு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அளந்து சென்ற பிறகு அவரிடம் அறிக்கை பெற்று அதை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர்கள் குடியிருப்பது அவர்கள் கிரையம் வாங்கிய சொந்த நிலம் என்றால் சரிதான். நான் எந்த ஒரு முறையான ஆவணமும் இல்லாமல் ஒருதலைபட்சமாக எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பினை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மரங்களை வெட்டி எடுத்து சென்றதாக இம்மனுவில் குறிப்பிட்டுள்ளேன் அதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

3) எனது மனுவில் குறிப்பிட்டுள்ள ராமமூர்த்தி, ராமலிங்கம் உள்ளிட்டவர்கள் ஊர் பஞ்சாயத்துதாரர்கள் என்பதால் என்னை அழைத்து பேசியதை நான் தவறாக நினைத்து அவர்கள் மீது இம்மனுவில் பழி சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/ - Padmavathi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.08.26 18:50:25 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU